# அக்டோபர் – 05 – வெள்ளி

**புனித மரிய பெலாஸ்தினா**

**‘உங்களுக்குசெவிசாய்ப்பவர் எனக்கும் செவிசாய்க்கின்றார்.’’ லூாக்.10:16**

## முதல் வாசகம் : யோபு 38 : 1 12 – 21, 40 : 3 - 5

ஆண்டவர் சூறாவளியினின்று யோபுக்கு அருளிய பதில் : உன் வாழ்நாளில் காலைப்பொழுதுக்குக் கட்டளையிட்டதுண்டா? வைகறையைத் தன் இடமறிய வைத்ததுண்டா?இவ்வாறு, அது வையக விளிம்பைத் தொட்டிழுத்து, பொல்லாதவரை அதனுளிருந்து உதறித்தள்ளுமே!முத்திரையால் களிமண் உருப்பெறுவதுபோல் மண்ணகம் வண்ணம் ஏற்றிய ஆடையாயிற்று. அப்போது, கொடியவரிடமிருந்து ஒளி பறிக்கப்படும் அடிக்க ஓங்கியகை முறிக்கப்படும். கடலின் ஊற்றுவரை நீ போனதுண்டா? ஆழியின் அடியில் நீ உலவினதுண்டோ?சாவின் வாயில்கள் உனக்குக் காட்டப்பட்டனவோ? இருள் உலகின் கதவுகளைக் கண்டதுண்டோ நீ?அவனியின் பரப்பை நீ ஆய்ந்தறிந்ததுண்டா? அறிவிப்பாய் அதிலுள்ள அனைத்தையும் அறிந்திருந்தால்!ஒளி உறைவிடத்திற்கு வழி எதுவோ! இருள் இருக்கும் இருப்பிடம் எங்கேயோ?அதன் எல்லைக்கு அதனை அழைத்துப் போவாயோ? அதனுறைவிடத்திற்கு நேர்வழி அறிவாயோ!ஆம், அறிவாய் அன்றே நீ பிறந்தவனன்றோ! ஆமாம் ஆண்டுகளும் உனக்கு அதிகமன்றோ!யோபு ஆண்டவர்க்குக் கூறிய மறுமொழிஇதோ! எளியேன் யான் இயம்புதற்குண்டோ? என் வாயைக் கையால் பொத்திக் கொள்வேன்.ஒருமுறை பேசினேன் மறுமொழி உரையேன் மீண்டும் பேசினேன் இனிப் பேசவேமாட்டேன்.

**பதில்பாடல் :** இறைவா! என்றும் உள்ள வழியில் என்னை நடத்துவீர்.

## நற்செய்தி : லூக்கா 10 : 13 - 16

அக்காலத்தில் இயேசு கூறியது: ”கொராசின் நகரே, ஐயோ! உனக்குக்கேடு! பெத்சாய்தா நகரே, ஐயோ! உனக்குக்கேடு! ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்லசெயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால், அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து, மனம் மாறியிருப்பர். எனினும் தீர்ப்புநாளில் தீருக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையைவிட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும்.கப்பர்நாகுமே, நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை, பாதாளம்வரை தாழ்த்தப்படுவாய். ”உங்களுக்குச் செவிசாய்ப்பவர் எனக்குச் செவிசாய்க்கிறார் உங்களைப் புறக்கணிப்பவர் என்னைப் புறக்கணிக்கிறார். என்னைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பினவரையே புறக்கணிக்கிறார்” என்றார்.

**தியானம்:** அனைத்திற்கும் ஊற்றாகிய இறைவன் தானே எல்லாமாக இருக்கிறார் என்பதை இன்றைய இறைவார்த்தைகள் மூலமாக வெளிப்படுத்துகின்றார். முதல் வாசகத்தில யோபு சராசரி மனித சிந்தனைப் பிரகாரம் கடவுளைக் கேள்வி கேட்கிறார். நான் யாருக்கும் தீங்கிழைக்கவில்லை, பாவம் செய்யவில்லை எனக்கேன் அப்படி நடந்தது? என்கிறார். இறுதியில் யோபுதன் பிழையை உணர்ந்தவராக உம்மைப்பற்றி காதால் மட்டுமே கேள்விப்பட்டேன் இப்பொழுது என் கண்களே உம்மைக் காண்கின்றன என்று தனது விசுவாசத்தை அறிக்கையிடுகின்றார். நாமும் யோபுவைப் போல சில வேளைகளில் நமது நீதியை நிலை நிறுத்தி கடவுளின் நீதியில்லாத செயல் என சிலவற்றை எடுத்துக்காட்ட நினைக்கின்றோம். கடவுள் எல்லாவற்றையும் பார்க்கின்றார் என்பதை மறந்து விடுகின்றோம். நற்செய்தியில் கொராசீன், பெத்சாயிதா, கா்ப்பநாகும் போன்ற இடங்களில் வல்லசெயல்கள் செய்து காட்டினாா். ஆயினும் மக்கள் அவரது வாா்ர்தைகளை ஏற்க மறுத்தனா், அவா் மெசியா என்பதை உணராது இருந்தனா். நாமும் இறைவாா்த்தையை அலட்சியம் செய்தவா்களாக, விசுவாச வாழ்வில் உறுதியற்றவா்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் இந்நிலையிலிருந்து விடுபட இறைவனை வேண்டுவோம்.